ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1829/27 - 2013 සැප්තැම්බර් මස 24 වැනි අඟහරුවාදා - 2013.09.24

*1829/27 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 24 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

### (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் கீழ் மாவனல்லை பிரதேச சபையின் தவிசாளரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்

தகுதிவாய்ந்த நியாயாதிக்கம் கொண்ட நீதிமன்றக் கட்டளையொன்றின் பிரகாரம் தவிசாளர் ஒருவரின் பதவி, வகியாதொழிந்தமையால் மாவனல்லை பிரதேச சபையில் பதவி வெற்றிடமொன்று எழுந்துள்ளதாதலாலும் ;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) ஆம் பிரிவின் கீழ் கோரலேகெதர பியதிஸ்ஸ எனும் தவிசாளர் அங்கம் வகிக்கின்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட்கள் காலக்கெடுவுக்குள் தவிசாளராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான மாவனல்லை பிரதேச சபையின் உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவிக்கவில்லையாதலாலும் ;

இப்போது மாவனல்லை பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் கம்லத்கே திலிப் நிஷாந்த ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு 2011, மாச்சு மாதம் 17 ஆந் திகதியன்று மாவனல்லை பிரதேச சபைக்காக நடாத்தப்பட்ட தேர்தலில், அதற்கடுத்ததாக அதிகூடுதலான விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ள திரு. பீ. பீ. விக்கிரமசிங்ஹ என்பவர் அந்த மாவனல்லை பிரதேச சபையின் தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

கம்லத்கே திலிப் நிஷாந்த,
தெரிவத்தாட்சி அலுவலர்,
மாவனல்லை பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
கேகாலை,
2013, செத்தெம்பர் 23.



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.